1969 மார்ச் 12]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தூத்துக்குடி பகுதியில் இந்தத் திட்டத்திற்காக புரோக்ராம் கொண்டு வர அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலேதான், 4,000 ஏக்கர்கள் என்று சொல்வதிலே அதிகமாக இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் தேனி பகுதி, வடார்க்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம் இவற்றில் ஒருசில பகுதிகளும் இதில் இருக்கிறது.

அரிசன, பின்தங்கிய வகுப்பினருக்கு பொது குடியேற்றம்.

*293 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் அரிஜன மக்கள், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய இரு பகுதியினரையும் ஒரே இடத்தில் காலனி கட்டி குடியேற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, ஜாதி எண்ணங்களை மாற்ற இது ஒரு நல்ல அம்சம் ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து பரிட்சார்த்தமாக அங்கே காலனி கட்டுவது குறித்து அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது அந்த எண்ணத்தின் அடிப்படையில் கட்டப்படுகின்ற வீடுகளில் 10 சதவிகிதம் மற்ற இதர, ஹரிஜனங்கள் அல்லாதவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால், அந்த இடத்திலே ஹரிஜனங்கள் அல்லாத மக்கள் குடியிருக்க முன் வரவில்லை. மேலும் ஊக்குவிக்க இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசாங்கம் எடுத்துப் பரிசீலனை செய்து கொண்டு வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, ஏற்கெனவே இருந்த திட்டத்திலேகூட அருந்ததியர்களும், ஹரிஜனங்களும் ஒரே இடத்தில் இருக்க வீடு கட்டும் திட்டம் இருந்தது. ஆனால் அவர்கள் தங்களுடைய வீடுகளை மாற்றி மாற்றி, ஆதாரமில்லாமல் தங்களுக்குள்ள வீடுகளை மாற்றி, அருந்ததியர்கள் வேறுவேறு இடங்களில் வாழ்க்கை நடத்தி வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிச் செய்திருந்தால் அவர்கள் ஒரேயிடத்தில் வசிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட எண்ணத்திலேதான் நான் ஆரம்பத்திலே பதில் சொன்னேன். கனம் உறுப்பினரைப் போன்ற பலரும் இப்படிப்பட்ட இடங்களுக்குச் சென்று மன வேற்றுமையில்லாது அனைவரும் ஒற்றுமையாக வாழக் கூடிய நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இப்படிப் பட்ட மாச்சரியங்கள் ஏற்படாமல் இருக்கும்.

திரு. ஏ. முனியாண்டி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி யூனியனிலிருந்து அரிஜனங்களும் மற்றவர்களும் குடியிருப் பதற்கு வீடுகட்டும் திட்டம் கொண்ட மனு அனுப்பப்பட்டுள்ளதா ? அனுப்பப்பட்டிருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போடவும்.

திரு. நா. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்ட வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் சேர்ந்து குடியிருப்பதற்கான காலனி கட்டும் திட்டம் மட்டும்தான் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ? தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் குடியிருப்பு கட்டித் தருகின்ற திட்டம் கைவிடப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கெனவே இருந்த திட்டமே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் என்று அல்ல. அதிலே 90 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள், 10 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதோர் என்ற திட்டம்தான் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கும் அந்தத் திட்டம் இருக்கிறது, ஆனால் 10 சதவிகிதத்தினர் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதோர் தாழ்த்தப்பட்ட மக்களோடு வாழ முன்வருவதில்லை என்றுதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன். எல்லா மக்களும் ஒன்றாக வாழ வேண்டுமென்ற எண்ணத்திலேதான் இந்தக் குறிப்பிட்ட இடத்திலேகூட இப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றலாமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

மாயூரம் அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தல்

***294 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விபரமென்ன

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) , (ஆ) : புதிதாக வார்டு ஒன்று கட்டும் திட்டம் பரிசீலனைக்காக 1970–71 நிதியாண்டுக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் நகரத்தினுடைய ஜனத்தொகை 20,0000 ஆக இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட அரசாங்க ஆஸ்பத்திரியில் அப்பொழுது நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த படுக்கைகள் எவ்வளவோ அதே அளவு படுக்கைகள்தான் இப்பொழுது இந்த நகரத்தினுடைய ஜனத்தொகை 50,000-க்கு மேற்பட்ட நிலையிலிருந்தும் இருக்கின்றன. அதை மாற்ற உடனடி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் என்னுடைய பதிலில் போதிய அளவு கட்டுவதற்கு 1970–71-ல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேனே தவிர, கட்டுவதற்குரிய திட்டம் பரிசீலனையில் இல்லையென்று சொல்லவில்லை. மேலும், 38 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் கட்ட வேண்டுமென்றுதான் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலையை முன்னிட்டுத்தான் ஒத்திப்போடப்படுகிறது. எனவே, 1970–71-ல் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப்படும்.

இந்திப் பிரச்சார சபை

***295 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டில் இந்திப் பிரச்சார சபை இலவசமாக இந்தி கற்றும் கொடுக்கும் திட்டம் பற்றி அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: இல்லை.